

சென்னை, மயிலாப்பூர் கபாலீசுவரர் திருக்கோயிலில் நேற்று முன்தினம் (15.08.2024) ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி சட்டமன்ற உறுப்பினர் த.வேலு ஆகியோர் சுதந்திரத் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்தில் கலந்துகொண்டனர்.



சென்னை திருவான்மியூர், நேற்று முன்தினம் (15.08.2024) மருந்தீசுவரர் திருக்கோயிலில், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் சுதந்திரத் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்தில் கலந்துகொண்டார்.



சென்னை வேளச்சேரி, தண்டீஸ்வரர் திருக்கோயிலில் நேற்று முன்தினம் (15.08.2024) சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி சுதந்திரத் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்தில் கலந்துகொண்டார்.



சென்னை கோயம்பேடு, குறுங்காலீஸ்வரர் திருக்கோயிலில் நேற்று முன்தினம் (15.08.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சுதந்திரத் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்தில் கலந்து கொண்டார்.



சென்னை, சைதாப்பேட்டை காரணீஸ்வரர் திருக்கோயிலில் நேற்று முன்தினம் (15.08.2024) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் சுதந்திரத் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்தில் கலந்துகொண்டார்.



காஞ்சிபுரம் மாவட்டம், மாங்காடு, காமாட்சி அம்மன் திருக்கோயிலில் நடைபெற்ற சுதந்திர தின சமபந்தி விருந்தில் நேற்று முன்தினம் (15.08.2024) பிற்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராம தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் உணவருந்தினார். இத்திருக்கோயிலின் பரம்பரை தர்மகர்த்தா மற்றும் துணை ஆணையர்/செயல் அலுவலர், மாங்காடு, நகராட்சித்தலைவர்.திருமதி.சுமதி முருகன், நகராட்சி துணைத்தலைவர் ஜபருல்லா, உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



சென்னை மயிலாப்பூர், மாதவப் பெருமாள் திருக்கோயிலில், 15.08.2024 அன்று சட்டமன்ற பேரவைத் தலைவர் மு. அப்பாவு அவர்கள், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் சுதந்திரத் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்தில் கலந்து கொண்டார்கள்.



சென்னை வடபழநி ஆண்டவர் திருக்கோயிலில் நேற்று முன்தினம் (15.08.2024) நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி ஆகியோர் சுதந்திரத் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்தில் கலந்துகொண்டனர்.



மண்ணடி தம்பு செட்டி தெரு ஸ்ரீ காளிகாம்பாள் திருக்கோவிலில் நேற்று 15.08.2024 கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் சுதந்திர திருநாளை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்தில் கலந்து கொண்டார்.



பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சுதந்திர தினத்தை முன்னிட்டு மைலாப்பூர் முண்டகக் கண்ணியம்மன் திருக் கோவிலில் நடைபெற்ற சமபந்தி விருந்தில் கலந்து கொண்டு உணவருந்தினார்.



சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள அகத்தீஸ்வரர் பிரசன்ன வெங்கடேச பெருமாள் திருக்கோயிலில் நேற்று முன்தினம் (15.08.2024) போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் சுதந்திரத் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்தில் கலந்துகொண்டார்.



திருவேற்காடு ஸ்ரீ தேவி கருமாரியம்மன் திருக்கோவிலில் 78 வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது இதில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சாமு.நாசர் எம்எல்ஏ முன்னிலையில் தமிழ்நாடு பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் சமத்துவ விருந்தை தொடங்கி வைத்து உணவு அருந்தி பெண் பக்தர்களுக்கு புடவை வழங்கினார். உடன் திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் சசிகாந்த் செந்தில், திருவேற்காடு நகர மன்ற தலைவர் என்.இ.கே.மூர்த்தி, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், திருக்கோவில் இணை ஆணையர் அருணாச்சலம், மற்றும் வி.குமார், ப.ச.கமலேஷ், ஜி.ராஜேந்திரன், நாராயண பிரசாத், வழக்கறிஞர் பெ.வினோத் மற்றும் அறங்காவலர் குழு உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.